# தேம்பாவணியில் இடம்பெறும் அறம்

*முனைவர் ஜ. பபீதா*
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
அக்சிலியம் கல்லூரி, காந்தி நகர், காட்பாடி

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6485

***அறிமுகம்***

*மனித மாண்புகளை விளக்குவது அறம் ஒன்றே ஆகும். நற்குணங்களும் நற்பண்புகளும் மனிதனை உயர்விற்கு இட்டுச் செல்லும், நன் மனிதனாக சமூகத்தோடு கூடி வாழ்ந்து தம்மை சார்ந்தவர்களையும் மதிப்பு மிக்கவர்களாக மாற்றி அமைக்கக்கூடியது அறம் என்ற ஆற்றலே ஆகும். இதனை நன்குணர்ந்த நம் முன்னோர்கள் தம் வாழ்வியலில் கடைபிடித்து வாழ்ந்ததோடு வருங்கால சமூகமும் இதனைப் பின்பற்றிட வேண்டும் என்று உறுதி பூண்டனர். அதன் விளைவாகத் தான் பல இலக்கியங்கள் வெளிவர ஆரம்பித்தன. நம் தமிழ் இலக்கியங்கள் பல வகைகளில் இந்த அறத்தையையே வலியுறுத்துவதை நாம் அறிவோம். அவ்வகையில் வீரமாமுனிவர் தாம் இயற்றிய தேம்பாவணி என்ற இக்காப்பியத்தின் வழியாக அறச் சிந்தனைகளை மக்களுக்கு தெள்ளிதின் விளக்கியுள்ளார். அறம் ஒன்றே மனித வாழ்வினை மாற்றியமைக்கக் கூடியது, அதனைப் பின்பற்றியவர்கள் வாழ்வு உயர்வு பெறும், இறை நம்பிக்கையும் வளரும், மனித நேயம் பெருகும் என்பதனை உணர்ந்து மக்கள் ஒன்றுபட்டு வாழும் வாழ்வே மத நல்லிணக்கத்திற்கு சிறந்த சான்றாகும் என்பதனை உணர்த்தும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.*

**அறம் விளக்கம்**

ஒரு செடியில் வளர்கின்ற மலர் அங்குள்ள இடங்களில் மணம் பரப்புகின்றது, வண்டுகள் உறிஞ்சுவதற்கும் மனிதர்கள் சுவைத்து மகிழ்வதற்கும் தேனை தருகின்றது, இதுவே மலரின் அறம். மனிதர்களுக்கு அறம் எதுவெனில் அமுத மொழிகளைக் கொண்டு யாரும் விரும்பி ஏற்கின்ற வார்த்தைகளை உதிர்க்க வேண்டும், தவறாமல் பின்பற்றி வாழக்கூடிய ஒழுக்க நெறிகளை எடுத்துரைத்து மக்களின் வாழ்வில் மகிழ்வைத் தந்து நல்ல மனிதர்களாக வாழ வைக்க வேண்டும், இத்தகைய செயலானது உலக வாழ்வில் நன்மதிப்பு பெற்று பலர் மதித்து போற்றும் வகையில் வாழ்வதோடு வீடு பேற்றிற்கும் வழி வகுக்கும், ஆகையால் பலரும் உலக வாழ்வையும் மோட்ச வாழ்வையும் பெற்று வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டும், அத்தகைய வாழ்க்கைக்கும் மனிதனின் அமைதியான பேச்சே காரணமாக அமையும். இத்தகைய சொல்லினை சொல்லக் கூடிய ஒரு மனிதனாக வளன் இருந்தார், அவர் தமது இரக்கம் சுரந்த நெஞ்சினில் தேர்ந்து ஆராய்ந்து அறிந்த அறநெறிகளை அனைவருக்கும் அறிவிக்க வேண்டுமென்று எண்ணினார்.

**வளனாரின் வாழ்வியல் அறம்**

அன்புடையவர்களின் வார்த்தைகளில் கருணையும் இரக்கத்தையும் காணமுடியும், மனதில் அன்பு இருந்தால் அவர்களின் செயல்கள் தோறும் அதனை விதைத்து செல்வர். வளனாரும் அன்புடையவராக திகழ்ந்தார், இதயத்தில் அன்பு கொண்டவர்களிடத்து வேத மொழிகளை எடுத்து இயம்பினால் நலம் பயக்கும், இல்லையெனில் ஈரமில்லா மண்ணில் விதைத்த விதைகள் போல் பயனற்றுப் போகும். ஆகையால் தான் வளனார் தம் அறவுரைகளை கூறுவதற்கு முன் கேட்போரின் உடலுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதன் மூலம் அவர்தம் மனதில் அன்பை விதைக்கவும் பெறவும் முடியும் என்று உணர்ந்தார்.

தினை விதைத்தவர் தினையை அறுப்பர் என்பதற்கேற்ப அன்பை விதைத்தவர் அன்பையே அறுவடை செய்வார் என்பதனை உணர்ந்து அனைவரையும் தம் உயிரைப் பேணுவதைப் போன்று பேணினார். பிறரிடம் அன்பு மிகுந்த சொற்களை பேசியதோடு தம் எலும்பையும் தர முன் வந்தார் இதனை,

> **என்பு வேண்டினும் இடும் தயை மலர்முகத்து, எவர்க்கும்**
> **மை தளர்ந்தன மனத்து, உரித் துணையென ஆனான்**
>
> **(தேம்பா. 2484: 3 - 4)**

என்று தேம்பாவணியும்,

> **அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
> **என்பும் உரியர் பிறர்க்கு**
>
> **(குறள். 72)**

என்று திருக்குறளும் அன்பின் உயர்வை எடுத்துரைக்கின்றது.

அறம் என்பது இத்தகையது என்று ஒரு வரையறைக்குள் அடைக்காமல் இயன்றவரை எங்கெல்லாம் தன்னால் அறம் விதைக்க முடியுமோ அங்கெல்லாம் விதைத்துச் சென்றார். தம்மால் உழைத்து உண்ண முடியாத மனிதர்களுக்கு தாமே உழைத்து உணவினைத் தந்தார், உடல் தளர்ச்சியுற்றவர்களுக்கு தாமே உழைத்து உதவினார், நோயினால் துன்பமுற்று வாடுவோர்க்கு அத்துன்பத்திலிருந்து விடுவிக்கும் மருந்தாக மாறி உதவிகள் பல செய்தார், ஐம்புலன்களை அடக்காமல் பொய்யாசைகளால் தூண்டப்பெற்று தளர்ச்சியுற்ற மனிதர்களுக்கு நல் அறிவினை புகட்டுகின்ற ஒளி விளக்காக நின்றார். மாயையால் மயக்கமுற்ற மனங்களுக்கு உற்ற துணையாகவும் விளங்கினார். இதனை,

> **கை தளர்ந்தனர்க்கு இரந்து தான் அளித்து, நோய் கருத்த**
> **மெய் தளர்ந்தனர் மெலிவுஅறும் மருந்தென, பொறிசெய்**
> **பொய் தளர்ந்தனர் புலனுறு விளக்கென, எவர்க்கும்**
> **மை தளர்ந்தன மனத்து, உரித் துணையென ஆனான்**
>
> **(தேம்பா. 2485: 1 - 4)**

என்கிறது தேம்பாவணி. இத்தகைய செயல்கள் யாவும் சிறந்த அறமே என்பதனை உலக மக்களுக்கு எடுத்துரைக்கும் விதமாய் வளனாரின் வாழ்வு அமைந்துள்ளதை காணமுடிகின்றது.

**கல்வி அறம்**

நாம் கற்ற கல்வியானது நமக்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் பயன்தரும் வகையில் அமைதல் வேண்டும். நாம் பிறருக்கு கற்றுத் தருதல் வேண்டும் இல்லையெனில் நம்முடைய நடவடிக்கைகள் வழியே பிறர் பார்த்துக் கற்றுக் கொள்ள வேண்டும் இவை அனைத்தும் கற்றல் அறமே.

மிகுந்த ஆசைக்கு இடம் தந்தால் உள்ளத்தில் இருள் படரும், அதனை அகற்றக் கூடிய வழியை ஆராய்ந்து தெளிந்த மனதைப் பெற்று வாழ்தல் வேண்டும், இனிய சொற்களை எப்போதும் எல்லோரிடமும் பேசுதல் வேண்டும், எம்மைச் சார்ந்தவர் சாராதவர் என்ற பாகுபாட்டினை அகற்றி எல்லோரையும் அரவணைத்துச் செல்லுதல் வேண்டும். கோபம் வரும்பொழுது அதனை மாற்றவும்

அடக்கவும் தேவையான வழிமுறைகளை ஆராய்ந்து செயல் புரிதல் வேண்டும். நிலை கெட்டவரை அறநெறியில் நெறிப்படுத்து கின்ற போக்கையும் எல்லாவித ஒழுக்க முறைகளையும் எடுத்துரைப்பதோடு, தன்னை நாடி வந்தவர்களின் தேவையை உணர்ந்து அவர்களிடமுள்ள தீயவற்றை களைந்து நல்லவற்றை எடுத்துக் கூறி அறநெறியில் நெறிப்படுத்துவதும் கல்வியால் வருகின்ற அறமேயாகும்.

உலகினை ஒருசேரப் படைத்து நீதி நெறிமுறைகளை வகுத்து வாழ்வினை வழி நடத்துகின்ற இறைவனின் மாண்பினை உணர்ந்து பிறருக்கும் அதனை உணர்த்திடல் வேண்டும். நாம் கற்றதை, உணர்ந்ததை பிறருக்கும் எடுத்துரைத்து உணர வைப்பதும் கல்வி கற்றதால் அடையக்கூடிய பெரும் பயனே என்பதனை,

***ஓர்என் பான், உலகு ஒருங்குடன் படைத்தபின், நீதிச்***
***சீரின்பால் நெறி சிதைவிலா நடவிய நிலையை,***
***பாரின் பால் நலம் படுவகண்டு இறைஞ்சலே, கல்விப்***
***பேரின்பான் உறும் பெரும்பயன் இது என உரைப்பான் (தேம்பா. 2490: 1 – 4)***

என்று தேம்பாவணி எடுத்துரைக்கின்றது. இக்கருத்தையே அரண் செய்யும் விதமாக வள்ளுவரும்,

***கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்***
***நற்றாள் தொழாஅர் எனின்***

***(குறள். 2)***

என்கிறார், கல்வி கற்றதன் பயனே மன இருளை அகற்றிவிட்டு தெளிவான வாழ்வியலை வாழ்வதற்கு வழிவகை செய்யும் வழிமுறையே ஆகும், இவ் வழிமுறையே சிறந்த அறமாகும் என்கிறது தேம்பாவணி.

### ஈகை அறம்

பிறருக்கு கொடுத்து வாழ்கின்ற வாழ்வியலே சிறந்த ஈகை அறமாகும். பொருளைக் கொண்டு தான் மட்டுமே வாழ வேண்டும் என்ற எண்ணத்தை கைவிட்டு பிறரையும் பேணிப்பாதுகாக்கின்ற எண்ணமே சிறந்த ஈகையாகும். குறியெதிர்ப்பை நோக்கி செய்கின்ற உதவியால் பயன் இல்லை, பிறருக்கு ஈவதனால் கிடைக்கும் புகழ் எனும் பயனை தேடிக் கொள்ளுதல் வாணிகம் செய்பவர்களின் அற்புதத் தொழிலாகும். ஆனால் இது அறப்பயன் ஆகாது, இதனை,

***விஞ்சும் ஈகையில் வீண்புகழ் கோடலே,***
***எஞ்சு வாணிகர் புல் தொழில் என்றலால்,***
***நெஞ்சு மாசுற மேற்புகழ் நீவுதற்கு***
***அஞ்சுவார், கொடை யாற்பயன் வேண்டுவார்***

***(தேம்பா. 2496: 1 – 4)***

என்ற தேம்பாவணி அடிகள் எடுத்து ரைக்கின்றது. இவைப் போலவே,

***இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்***
***அறவிலை வணிகண் ஆய் அலன்***

***(புறம். 134)***

என்ற புறநானூற்றில் இடம்பெறும் பாடல் ஒன்றும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றது.

பசியால் வாடக்கூடிய வறியவர்க்கு உதவி செய்யாமல் நல்ல நிலையில் உள்ளவர்களுக்கு தரும் கொடையானது வயலுக்குப் பாய்ந்து பயன்தர வேண்டிய ஆற்றுநீர் கடலில் கலந்து எந்த நன்மையும் தராமல் பயனற்று போவதைப் போன்றது. கதிர்கள் நீர் இல்லாமல் காய்கின்ற வேளையில் மழை பொழிந்து அவற்றைக் காப்பது போல எப்பொருளும் இன்றி தளர்ந்த நிலையிலுள்ள வரியவர்களுக்கு கொடுத்து உதவுவது சிறந்த ஈகை அறமாகும்.

***தளர்ந்த வாழ்க்கையைத் தாங்கி, இல் லோர்க்கு இடும்***
***கிளர்ந்த வான்கொடை, கேழ்த் தெழும் ஈகையே***

***(தேம்பா. 2499: 3 – 4)***

சிறந்தது. இவையே மாட்சிமைப் பொருந்திய கொடை என்கிறது தேம்பாவணி.

***வறியார்க்கு ஒன்றுஈவதே ஈகை மற்றெல்லாம்***
***குறியெதிர்ப்பை நீர துடைத்து***
***(குறள். 221)***

என்று வள்ளுவர் கூறுகின்றார். இதன் வழி பிறருக்கு கொடுப்பதால் உலக வாழ்விலும், மறுமை வாழ்விலும், இறையருள் கிடைக்கும் என்பதனை மனிதர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## தொகுப்புரை

மனித வாழ்வினை மாற்றி அமைக்கக் கூடிய மாபெரும் சக்தியாக விளங்குவதோடு மட்டுமின்றி மனிதநேயம் பெருக்கி மத நல்லிணக்கத்தோடு வாழ்வதற்கும் உறுதுணையாக விளங்குவது அறம் என்பது பெறப்படுகின்றது. வாழ்வின் ஒவ்வொரு சூழலிலும் தருணங்களிலும் பின்பற்றக் கூடியதாகவே அறம் திகழ்கின்றது, நாம் பேசும் வார்த்தைகளில் அன்பு தோய்ந்து பேசுவதும் நல்லறமே, உழைக்க முடியாத மனிதர்களுக்கு தம் உழைப்பின் மூலம் உதவி செய்வதும் அறமே, ஐம்புலன்களை அடக்காத மனிதர்களுக்கு நல் அறிவினை புகட்டுவதும் அறமே, தளர்ந்த மனங்களுக்கு உற்ற துணையாக விளங்குவதும் அறமே, கற்ற கல்வியால் பிறருக்கு பயன் தரும் வகையில் உறைப்பதும் வாழ்ந்து காட்டுவதும் நல்லறமே, ஆசைக்கு இடம் தராமல் வாழ்வதும் சிறந்த அறமே, இறை வார்த்தையை உணர்ந்து அதன் வழி நடப்பதும், பிறரை நடத்துவதற்காக உணர்த்துவதும் நல்லறமாகும், இல்லாதவர்களுக்கு நம்மால் இயன்றவரை கொடுத்து உதவுவதும் எந்த ஒரு பயனையும் கருதாமல் உதவி செய்வதும் சிறந்த அறமாகும்.

இவ்வாறாக தேம்பாவணி காப்பியமானது வாழ்வியலுக்கு தேவையான எல்லா அறங்களையும் எடுத்துரைத்து மக்கள் அதனை பின்பற்றி வாழ்வதற்கான வழிவகை செய்துள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.

## பார்வை நூல்கள்

1. தேம்பாவணி காப்பியம் - மூலமும் உரையும், மூல ஆசிரியர் - வீரமாமுனிவர், உரையாசிரியர் - அருட்சகோதரி முனைவர் மார்கரெட் பாஸ்டின் ஜூரண்டீ, உயிர் எழுத்து பதிப்பகம், திருச்சி, டிசம்பர் 2014.
2. திருக்குறள், மூல ஆசிரியர் திருவள்ளுவர், தெளிவுரை, உரையாசிரியர் பி.எஸ். ஆச்சார்யா, நர்மதா பதிப்பகம், சென்னை.
3. சங்க காலம் - எட்டுத்தொகை, திருக்கோவிலூர் மடாலயம், சென்னை.